த. பொ.
து.த.பொ.
ஆ.அ. 04/06/2020
த.வ.தொ.அ.

<u>சுருக்கம்</u>

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி– கருணை அடிப்படையில் பணி நியமனம்– திருமதி என்.பத்மாவதி, க/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு. ப.பரமேஸ்வரன் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் – பணிவரன்முறை – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>பொதுப்பணி (பி1) துறை</u>

அரசாணை (3ப) எண். 21

நாள் : 20.03.2020
விகாரி, மாசி : 7,
திருவள்ளுவர் ஆண்டு 2051.

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, கோயம்புத்தூர் மண்டலம் கடிதம் எண். ஆட்சி 1(2)/10878/2018, நாள் 11.06.2019

---

<u>ஆணை:–</u>

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித்துறை சார்ந்த கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், ஈரோடு அலுவலகத்தில் இளநிலை வரைதொழில் அலுவலராகப் பணிபுரிந்து வந்த திரு ப.பரமேஸ்வரன் அவர்கள் பணியிலிருக்கும் போது 27.06.2012 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரரான அவரது மனைவி திருமதி என்.பத்மாவதி என்பவருக்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்களால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவி அளிக்கப்பட்டு, அவர் 26.11.2018 முற்பகல் முதல் அப்பதவியில் பணிபுரிந்து வருகிறார் என்றும், இடைநிலைக் கல்வியை ஏப்ரல் 1997–இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் தெரிவித்து, தேவையான சான்றாவணங்களை அனுப்பி வைத்து தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 26.11.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, கோயம்புத்தூர் மண்டலம் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, கோயம்புத்தூர் மண்டலம் அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. திருமதி என்.பத்மாவதி, இளநிலை உதவியாளர் என்பவர் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குற்குரிய அனைத்து

நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித் துறையில் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நாளான 26.11.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், பணிநியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் நாளிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வு/ ஊதிய நிலுவை இருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அ.சா.எண்.1724/க்யூ2/2020– 1, நாள். 11.03.2020 (ம) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, அ.சா. எண். 9443/ஜி2/2020, நாள் 13.03.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர்–1.
திருமதி என்.பத்மாவதி, இளநிலை உதவியாளர்.
(தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, கோயம்புத்தூர் மண்டலம்,
கோயம்புத்தூர்–1 வழியாக)
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை –18.
நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை / பணியாளர் மற்றும்
நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை– 9.
இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

30.04.2020

பிரிவு அலுவலர்

29-4-20

உ. பி. ஆ-பி.1(2)/3649/2020(10878/2018) நாள்.12.6.2020

உரியவருக்கு அனுப்பப்படுகிறது.

பெறுநர்
திருமதி. என். பத்மாவதி,
இளநிலை உதவியாளர்
தலைமைப் பொறியாளர் அலுவலகம் (பொது)
நீர்வள ஆதாரத் துறை,
கோவை மண்டலம், கோவை

ஆட்சி அலுவலர்
தலைமைப் பொறியாளர் அலுவலகம்
கோயமுத்தூர் மண்டலம்
கோயமுத்தூர் - 641 ...
12.6.2020